இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 28-03-2025



# தேவையற்ற வதந்தியா?

தொகுதி மறுசீரமைப்பு வந்தால் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்று தேவையற்ற வதந்தியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரப்பி வருவதாகச் சிலர் புலம்பி வருகிறார்கள்.

இப்படி தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்று முதலில் சொன்னவர் முதலமைச்சர் அல்ல.

2023 ஆம் ஆண்டு தெலுங்கானா மாநிலத்தில் பரப்புரை செய்ய வந்த பிரதமர் மோடி அவர்கள், “சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி மக்கள் தொகை அடிப்படையில் சமூகங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என காங்கிரசுக் கட்சி சொல்கிறது. அடுத்ததாக தொகுதி மறுவரையறை நடக்க உள்ளது. காங்கிரசுக் கட்சி சொல்வதைப் போல மக்கள் தொகையின் அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டால், தென் மாநிலங்கள் 100 தொகுதிகளை இழக்க நேரிடும். தென்னிந்திய மக்கள் இதனை ஏற்பார்களா?” என்று கேட்டார் பிரதமர்.

இதனடிப்படையில் பார்த்தால் தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்பதை முதலில் சொன்னவர் பிரதமர் நரேந்திர மோடி தான்!

அரசியல், பொருளாதாரச் செயல்பாட்டாளராக இந்திய அளவில் அறியப்படுபவர் யோகேந்திர யாதவ். டெல்லியில் உள்ள புகழ்பெற்ற தொலைக்காட்சி நிறுவனங்களின் ஆலோசகராக இருந்தார். 2010 ஆம் ஆண்டு கல்வி உரிமைச் சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இருந்தார். சமூக ஆய்வு மையத்தின் உறுப்பினர். ஆம் ஆத்மி கட்சியில் தொடக்கத்தில் இருந்தார். இப்போது வழக்கறிஞர் பிரசாந்த் பூஷனுடன் இணைந்து ‘ஸ்வராஜ் அபியான்’ என்ற அமைப்பைநடத்திவருகிறார். அவரதுகட்டுரைகள், இந்தியாமுழுமைக்குமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

யோகேந்திர யாதவ், தொகுதி மறுசீரமைப்பு குறித்து எழுதிய கட்டுரை, ‘ஆனந்த விகடன்’ இதழில் (26.3.2025) வெளியாகி உள்ளது. ‘தொகுதி மறுசீரமைப்பு என்கிற பேராபத்து’ என்பதுதான் அதன் தலைப்பு.

“நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை - ஒரு மாநிலத்தில் அதிகமாக்கும் அல்லது குறைக்கும் இந்த நடைமுறையை - நிரந்தரமாக நிறுத்தி வைப்பதே இந்தியா எதிர்கொள்ள இருக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருக்கும்” என்று அவர் எழுதி இருக்கிறார்.

“உத்தேச மக்கள்தொகை அடிப்படையில் 2026- ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தொகுதிகள் எப்படிப் பகிர்ந்து அளிக்கப்பட வாய்ப்புள்ளது என மிலன் வைஷ்ணவ் மற்றும் ஜேமி ஹின்ட்சன் ஆய்வு செய்தனர். இப்போதைய மொத்தத் தொகுதிகளின் எண்ணிக்கையில் இந்த ஆய்வைச் செய்தபோது, தென்னிந்திய மாநிலங்கள்தான் அதிகம் பாதிக்கப்படுபவையாக உள்ளன. தமிழ்நாடு 8 தொகுதிகளையும், கேரளா 8 தொகுதிகளையும், ஆந்திராவும் தெலங்கானாவும் இணைந்து 8 தொகுதிகளையும், கர்நாடகா 2 தொகுதிகளையும் இழக்கும். பெரிய அளவில் இழக்கும் மற்றவையும் இந்தி பேசாத மாநிலங்களே!

மேற்கு வங்காளம் 4 தொகுதிகளையும், ஒடிசா 3 தொகுதிகளையும், பஞ்சாப் ஒரு தொகுதியையும் இழக்கும். இந்தி பேசும் மாநிலங்களில் உத்தரகாண்டும் இமாசலப் பிரதேசமும் மட்டுமே தலா ஒரு தொகுதியை இழக்கின்றன. மற்றவர்களுக்குக் கூடுதல் தொகுதிகள்தான் கிடைக்கின்றன. உ.பி.க்கு 11, பீகாருக்கு 10, ராஜஸ்தானுக்கு 6, மத்தியப் பிரதேசத்துக்கு 4 என தொகுதிகள் ஆதாயம்.

இந்தத் தொகுதி மறுவரையறை நடவடிக்கையானது இந்தி பேசும் மாநிலங்களுக்கும், இந்தி பேசாத தென்னிந்திய மாநிலங்களுக்கும் இடையிலான முரண்பாட்டை இன்னும் மோசமாக்கிவிடும்.

தற்போது மக்களவையின் 543 தொகுதிகளில் இந்தி மாநிலங்கள் 226 தொகுதிகளைப் பெற்றுள்ளன. தொகுதி மறுவரையறையில் இது 259 ஆக உயரும். இது கிட்டத்தட்ட பெரும்பான்மை எண்ணிக்கை. தற்போது 132 இடங்களுடன் இருக்கும் தென்னிந்திய மாநிலங்கள் இன்னும் எண்ணிக்கை குறைந்து பலவீனமாகும். அவை கிழக்கு மற்றும் மேற்கு இந்திய மாநிலங்களுடன் இணைந்து முயற்சி செய்தாலும், நாடாளுமன்றத்தில் அரசியல் சட்டத் திருத்தங்களை எதிர்த்து ஒன்றுமே செய்ய முடியாத நிலை ஏற்படும்” - என்று எழுதி இருப்பவர் யோகேந்திர யாதவ்.

“நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை நடைமுறைக்கு வந்தால் அது பா.ஜ.க.வின் அதிகாரத்தை மேலோங்கச் செய்யும்” என்று ‘தி இந்து’ நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது. வர்கீஸ் கே.ஜார்ஜ், விக்னேஷ் ராதாகிருஷ்ணன் ஆகிய இருவர் இணைந்து எழுதிய கட்டுரையில், “தொகுதி எல்லை மறுவரையானது, தீபகற்ப மாநிலங்களின் அரசியல் அதிகாரத்தைக் குறைக்கும். மத்திய மாநிலங்களின் அதிகாரத்தை அதிகரிக்கும். பா.ஜ.க. அல்லாத கட்சிகளின் அதிகாரத்தைக் குறைத்து, பா.ஜ.க.வுக்கு வலுசேர்க்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

தொகுதிகளின் எண்ணிக்கை நமக்கு எந்தளவுக்கு குறையும், உ.பி.க்கு எந்தளவுக்கு அதிகமாகும் என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லி இருப்பதை இக்கட்டுரையாளர்களும் உறுதி செய்துள்ளார்கள். பா.ஜ.க.வுக்கு செல்வாக்கு மிகுந்த மாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகமாகும் என்றும் இவர்கள் சொல்லி இருக்கிறார்கள். மாநிலக் கட்சிகளின் வலிமையைக் குறைத்து, தேசிய அரசியலில் தென் மாநில அரசியல் கட்சிகளின் பங்களிப்பைக் குறைத்து, பா.ஜ.க.வின் தேசிய வலிமையை இவை அதிகரிக்கும் என்றும் இக்கட்டுரையாளர்கள் துல்லியமாகக் கணித்துள்ளார்கள். ஒருவிதமான புவியியல் வகைப்பட்ட பிளவை உருவாக்குகிறார்கள் என்றும் அச்சம் தெரிவித்துள்ளது ‘தி இந்து’.

‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ தலையங்கமும் இதனை உறுதி செய்துள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்வது வதந்தி அல்ல, உண்மைதான் என்பதை உறுதிப்படுத்த இவை போதுமானது.**

●●

## வீரவநல்லூர் அருகே கொலை வழக்கில்

# 4 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை!

## திருநெல்வேலி மாவட்ட காவல்துறையினர் தண்டனை பெற்றுத் தந்தனர்!

*திருநெல்வேலி, மார்ச் 28-*

*திருநெல்வேலி மாவட்டத்தில் வீரவநல்லூர் அருகே கொலை வழக்கில் 4 சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு திருநெல்வேலி மாவட்ட காவல் துறையினர் ஆயுள் தண்டனை பெற்று தந்தனர்.*

*சேரன்மகாதேவி காவல் உட்கோட்டத்திற்குட்பட்ட வீரவநல்லூரில் கடந்த 2000ம் வருடம் வயலில் மாடு மேய்ப்பது சம்பந்தமாகவும் ஒரு தரப்பினரின் வளர்ச்சி மற்றொரு தரப்பினருக்கு பிடிக்காமலும் ஏற்பட்ட முன்பகை காரணமாக கடந்த 2000, 2001, 2009, 2011 மற்றும் 2013 ம் ஆண்டு என வரிசையாக நடைபெற்ற 5 கொலை வழக்குகளில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். இதில் கடந்த 2009 ம் ஆண்டில் வீரவநல்லூரைச் சேர்ந்த ஐயப்பன் என்பவரது கொலை சம்பவத்திற்கு பழிக்கு பழி வாங்கும் விதமாக 21.06.2011ம் தேதி வீரவநல்லூரை சேர்ந்த சந்தானம் என்பவரின் மகன் சுப்பையா தாஸ் (38), பொன்னையா தாஸ் என்பவரின் மகன் சுரேஷ் (37), அருணாச்சலம் என்பவரின் மகன் சுரேஷ் (37), கொம்பன் என்பவரின் மகன் கொம்பையா (38) மற்றும் 17 நபர்கள் சேர்ந்து வீரவநல்லூர் பசும்பொன் தெருவைச் சேர்ந்த சிதம்பரம் என்பவரின் மகன் ரத்தினவேல் பாண்டியன் என்பவரை அரிவாளால் தாக்கி கொலை செய்துள்ளனர். இது சம்பந்தமாக இறந்து போன ரத்தினவேல் பாண்டியன் மகன் வெள்ளத்துரை அளித்த புகாரின் அடிப்படையில் வீரவநல்லூர் காவல்துறையினர் கொலை வழக்கு பதிவு செய்து மேற்கண்ட 21 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.*

*இவ்வழக்கு விசாரணை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த போது கடந்த 12 ஆண்டுகளாக முன்னேற்றம் இல்லாமல் இருந்த நிலையில், அவ்வழக்கின் விசாரணையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். சிலம்பரசன் அவர்கள் துரிதப்படுத்தி சாட்சிகளை விரைந்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விசாரணை முடித்து இன்று 26.03.2025 ம் தேதி இவ்வழக்கை விசாரித்த நீதிபதி திரு. பத்மநாபன் அவர்கள் எதிரிகளான சுப்பையா, பொன்னையா தாஸ் என்பவரின் மகன் சுரேஷ், அருணாச்சலம் என்பவரின் மகன் சுரேஷ், கொம்பன் என்பவரின் மகன் கொம்பையா ஆகிய நான்கு பேருக்கும் ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூபாய் 1000/ அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். வரிசையாக நடைபெற்ற ஐந்து கொலை வழக்குகளில் இதுவே தண்டனை பெற்ற முதல் வழக்காகும்.*

*இவ்வழக்கில் திறம்பட புலன் விசாரணை செய்து சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி எதிரிகளுக்கு தண்டனை பெற்று கொடுத்த சேரன்மகாதேவி துணை காவல் கண்காணிப்பாளர் சத்யராஜ் மற்றும் வீரவநல்லூர் காவல் துறையினரை திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.சிலம்பரசன் வெகுவாக பாராட்டினார்.*

*மேலும் திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 2½ மாதங்களில் ஏற்கனவே நடைபெற்ற ஜாதிய கொலைகள், பழிக்கு பழியான கொலைகள் போன்ற முக்கிய கொலை வழக்குகள் மற்றும் வீரவநல்லூரில் ஏற்கனவே நடைபெற்ற மற்றொரு கொலை வழக்கில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு வீரவநல்லூர் அருகே உப்பு வாணிமுத்தூர் ஊரில் நடந்த 5 கொலை வழக்கில் 11 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும், பாளையஞ்செட்டிகுளத்தில் ஒரே சமுதாயத்தினர் இடையே நடைபெற்ற கொலை வழக்கில் ஒருவருக்கு மரண தண்டனையும், 4 நபர்களுக்கு ஆயுள் தண்டனையும் பெற்று கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் கோபால சமுத்திரம் பகுதியில் 2021ம் ஆண்டு நடைபெற்ற ஜாதிய கொலை வழக்கையும் துரிதப்படுத்தி 3 நபர்களுக்கு ஆயுள் தண்டனை பெறப்பட்டுள்ளது.*

*திருநெல்வேலி மாவட்ட காவல்துறையின் துரித நடவடிக்கையால் 2025ஆம் வருடத்தில் மட்டும் இதுவரை 12 கொலை வழக்குகளில் ஈடுபட்ட ஒருவருக்கு மரண தண்டனையும், 41 குற்றவாளிகளுக்கு (14 சரித்திர பதிவேடு குற்றவாளிகள் உட்பட) ஆயுள் தண்டனையும் பெற்றுத் தரப்பட்டுள்ளது.*

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா கோரிக்கையை ஏற்று

# புதுவையில் கொரோனா காலத்தில் பணியாற்றிய 256 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி!

## சட்டப் பேரவையில் முதலமைச்சர் ரங்கசாமி அறிவிப்பு!

*புதுவை, மார்ச் 28-*

*எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா அவர்களின் கோரிக்கையை ஏற்று கொரோனா காலத்தில் பணியாற்றிய 256 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள் என்று பேரவையில் முதல்வர் ரங்கசாமி அறிவிப்பு செய்தார்.*

*புதுச்சேரி 15-வது சட்டப்பேரவையின் ஆறாவது அமர்வின் கடைசி நாளான இன்று பூஜ்ஜிய நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பேசும்போது, புதுச்சேரி சுகாதாரத் துறையில் புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் பிராந்தியங்களில் கொரோனா காலத்தில் 256 செவிலியர்கள் பணியாற்றினார்கள். பின்னர் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 256 கொரோனா கால செவிலியர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஆனாலும் அவர்கள் தொடர்ந்து ஒப்பந்த பணியை பணி நீட்டிப்பு செய்யக் கோரி புதுச்சேரி அரசை வலியுறுத்தினார்கள். இருந்தும் புதுச்சேரி அரசு அவர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக பணி வழங்காத காரணத்தால் அவர்கள் சென்னை மத்திய நிர்வாக தீர்ப்பாயம் சென்றனர். அதில் புதுச்சேரி அரசு இவர்களுக்கு பணி வழங்க பரிந்துரைத்து தீர்ப்பு வழங்கியது. ஆனாலும், புதுச்சேரி அரசு நடவடிக்கை எடுக்காததால் மீண்டும் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றம் சென்று தற்போது உச்சநீதி மன்றம் வரை சென்றுள்ளனர்.*

*உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் வரை எதிர்பார்க்காமல் புதுச்சேரி அரசு கொரோனா காலத்தில் யாரும் பணிக்கு வராத நேரத்தில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் பணியாற்றிய 256 செவிலியர்களுக்கு தொகுப்பூதியத்தில் மீண்டும் பணி வழங்க வேண்டும் என்றார். இதே கருத்தை தி.மு.க. உறுப்பினர்கள் ஏ.எம்.எச். நாஜிம், நாக.தியாகராஜன் ஆகியோரும் வலியுறுத்தி பேசினார்கள்.*

*முதல்வர் ரங்கசாமி: எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையை ஏற்று கொரோனா காலத்தில் பணியாற்றிய செவிலியர்கள் 256 பேருக்கும் ஒப்பந்த அடிப்படையில் பணி வழங்கப்படும் என்று அறிவிப்பு செய்தார்.*

# இந்தியா - ரஷ்யா கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி!

## போர்க்கப்பல்கள் சென்னை வருகை!

சென்னை, மார்ச் 28 –

இந்தியா – ரஷ்யா கடற்படை களின் கூட்டுப் பயிற்சிக்காக போர்க்கப்பல்கள் சென்னைக்கு வருகை தந்துள்ளன. ரஷ்ய நாட்டில் 3 போர் கப்பல்கள் தற்போது தமிழ்நாட்டின் கடலோர பகுதியான சென்னை துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளன.

ரஷ்யாவின் 3 போர் கப்பல்கள் மற்றும் இந்திய கடற்படையின் கப்பல்கள் என இரு நாட்டு தரப்பினரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து கடற்படைக்கான கூட்டுப்பயிற்சி மேற்கொள்வதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியா – ரஷ்யாவின் கடற்பயிற்சியால் பசுபிக் பெருங்கடல் சென்றுள்ள அநேக கப்பல்கள் சென்னை திரும்புகின்றன.

ரஷ்யாவின் பசுபிக் பெருங்கடல் போர் கப்பல்கள் தான் இந்த கூட்டு பயிற்சிக்காக சென்னை துறைமுகத்திற்கு வந்துள்ளன. கடலோர பாதுகாப்பு தொடர்பாக இரு நாடுகளும் கூட்டு பயிற்சியில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லண்டனில் சிம்பொனி இசையை அரங்கேற்றிய

# இசைஞானி இளையராஜாவுக்கு ஜூன் 2ல் பாராட்டு விழா!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 28 -**

**ஜூன் 2ம் தேதி இசைஞானி இளையராஜாவுக்கு அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தப்படுகிறது என சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

சட்டப் பேரவையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர் சிந்தனைச் செல்வன் விவாதத்தில் பங்கேற்று பேசும் போது, இசைஞானி இளையராஜா அவர்கள் லண்டனில் சிம்பொனி இசையை அங்கு கேட்கச் செய்தார். தமிழ்நாட்டு மக்களும் அவரது சிம்பொனி இசையை கேட்க முடியாதா? என்கிற வகையில் பேசினார்.



அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு பேசுகையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சிந்தனைச் செல்வன் அவர்கள், இசைஞானி இளையராஜா அவர்களைப் பற்றி பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்லி லண்டனுக்குச் சென்று சிம்பொனி இசையை நடத்தி வந்த பெருமை தமிழகத்திற்குக் கிடைக்காதா? தமிழர்களாக இருக்கக் கூடிய நாம் கேட்க முடியாதா? என்ற ஏக்கம் இருப்பதாக எடுத்துச் சொன்னார்.

அவரை நான் சந்தித்த போது இதே பிரச்சினையை நான் அவரிடத்தில் எடுத்துச் சொல்லி அவரும் நிச்சயமாக, உறுதியாக ஆனால், லண்டனில் இருக்கக் கூடிய 400 பேரையும் இங்கே அழைத்து வருவதென்றால் நினைத்தநேரத்தில் அழைத்து வந்துவிட முடியாது, கால அவகாசம் தேவைப்படுகிறது.

எனவே அதனையெல்லாம் கருத்திலே கொண்டு ஜூன், 2 ஆம் தேதி, அவருடைய பிறந்த நாள், அதுமட்டுமல்ல அவர் திரையுலகத்திற்கு வந்து 50 ஆண்டு காலம் நிறைவடையக் கூடிய அந்த நாளும் அமைகிறது. அதையும் பாராட்டக் கூடிய வகையில் சிம்பொனி நிகழ்ச்சியை லண்டனில் வெற்றிகரமாக நடத்தி முடித்து இருக்கிறார் அதற்கு பாராட்டு விழாவை தமிழக அரசே நடத்த இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்துப் பேசினார்.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக்கூட்டரங்கில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் சார்பில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத் தலைவர் மேனாள் நீதிபதி.நீதியரசர் முனைவர் ச.தமிழ்வாணன் அவர்கள் தலைமையில் 25.03.2025 அன்று கள ஆய்வுக் கூட்டம் அலுவலர்களுடன் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், துணைத்தலைவர் இமயம் (வெ.அண்ணாமலை), உறுப்பினர்கள் முனைவர் சு.ஆனந்தராஜா, பொ.இளஞ்செழியன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.மு.பாலகணேஷ் மற்றும் பலர் உடன் உள்ளனர்.